பெரியார் மாவட்டத்தில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

(224—*வினா எண். 865) திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பெரியார் மாவட்டம், நம்பியூர் மற்றும் எம்மாம்பூண்டி, ஓடிலக்கோயில், அஞ்சானூர், அரசூர், கூடக்கரை, லாகப்பாளையம் ஊராட்சிகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் எப்பொழுது துவங்கப்படும் ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: தலைவர் அவர்களே, நம்பியூர் பேரூராட்சியில் விடுபட்ட பகுதிகளுக்கும், ஓடிலக்கோயில் மற்றும் நம்பியூர் ஒன்றியத்தின் மற்றைய ஊராட்சிகளுக்கும் குடிநீர் வழங்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் திட்டம் ஆய்வில் உள்ளது. ஆய்வுப் பணிகள் முடிக்கப்பட்டவுடன் திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அரசின் ஒப்புதல் பெற்ற பின்னர் செயற்பணி துவக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தத் திட்டம் ஆய்வுப் பணியில் எடுத்துக் கொள்ளப்படுவதற்குக் கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகளாகக் காலதாமதம் ஆகிக் கொண்டிருக்கிறது. அதேபோல, தொட்டம் பாளையம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் என்கின்ற ஒரு திட்டமும், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலே, 1987 இலே நடந்த ஒரு ஆய்வு வெளியிட்ட நேரத்தில், புக்லெட்டாக வெளியிட்டார்கள்—அதிலே 1987 முடிவதற்குள்ளாக ஆய்வுப் பணிகள் அதிகாரிகள் மூலமாக அனுப்பி முடித்து வைக்கப்படும் என்ற உத்தரவாதத்தைக் கொடுத்தார்கள். ஆனால் 1988-ஆம் ஆண்டு முடிந்து, இப்பொழுது 1989 ஆம் ஆண்டு ஆகியும் அந்த ஆய்வுப் பணிகள் இன்னும் டிவிஷன் நிலையிலேயே, நிர்வாகப் பொறியாளர் அவர்களுக்கே வந்து சேர முடியாத அளவிலே, சப்-டிவிஷனிலே ஆய்வுப் பணியிலேயே இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இன்றைக்கிருக்கும் கடுமையான வறட்சியைப் பார்க்கின்ற பொழுது, லாரிகள் மூலம் தான் தண்ணீர் கொடுக்க வேண்டிய நிலைமைகள் அந்தப் பகுதியிலே இருக்கின்றன. பனைமரங்கள் கூடக் காய்ந்து, வறண்டு விழுகின்ற ஒரு நிலைமை நம்பியூர் பகுதியிலே ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சரவர்கள் நேரிலே வேண்டுமானாலும் அங்கே வந்து அதை ஆய்வு செய்தால், நாங்கள் கூட வரத் தயாராக இருக்கிறோம். ஆழ் குழாய்க் கிணறுகளெல்லாம் வறண்டு, காய்ந்து விடுகின்ற நிலைமை அங்கே ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இதை மனதிலே

கொண்டு, உடனடியாகப் போர்க்கால நடவடிக்கை எடுத்து, இந்த நம்பியூர் மற்றும் எட்டு பஞ்சாயத்துக்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தையும், நேற்று அமைச்சரிடத்திலே கொடுத்த தொட்டம்பாளையம் மற்றும் 140 கிராமங்களுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினுடைய ஆய்வுப் பணிகளைக் குறிப்பிட்ட காலத்திற்குள், இரண்டொரு மாதங்களுக்குள்ளாக இங்கே கோப்புகள், வாரியத்திற்கு வருகின்ற அளவிலே அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுக்க முன் வருவாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1987-லே அந்தத் திட்டம் முடிக்கப்பட வேண்டுமென்று குறிப்பிட்டிருந்தார்கள். உறுப்பினருக்கு நன்றாகத் தெரிந்திருக்கும். 1987, 1988-லேயெல்லாம் இந்த அமைச்சரவை ஆட்சியிலே இல்லை. எந்தக் கட்சி ஆட்சியிலே இருந்தது என்பது அவர்களுக்குத் தெரிந்திருக்கும். அப்பொழுதே அவர் செயல்பட்டு இருக்க வேண்டும். இருந்தாலும் இப்பொழுது குறிப்பிட்டிருக்கிற இந்த இரண்டு மாத காலத்தில் இந்த ஆட்சி உரிய நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறது. ஆவன செய்யும் என்பதை மட்டும் அவருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. கே. சின்னசாமி: தலைவரவர்களே, நாங்கள் 1987, 1988-லே ஆட்சியிலே இருந்த காரணத்தினாலேதான் இந்தத் திட்டங்களை ஆய்வுப் பணிக்கு எடுக்கக்கூடிய நடவடிக்கைகளை மேற்கொண்டோம். இன்றைக்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் இங்கே பொறுப்பேற்று இருக்கின்றீர்கள். நான் சொல்வது, 1988-லே இடையிலே யார் இருந்தார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். அது கவர்னருடைய ஆட்சி. அதிலே அதிகாரிகள் யாரைக் கேட்டாலும் சரியான பதில் இல்லை என்பது எல்லோருக்கும் தெரியும். ஆகவே, நான் தெரிவித்துக் கொள்வது, மாண்புமிகு அமைச்சரவர்கள் நேராக வரட்டும். வந்து அந்த இடங்களைப் பார்வையிடட்டும். பனை மரங்களே சாய்ந்து, கீழே விழுந்து கொண்டிருக்கிற நிலைமை இருக்கிறது. ஆகவே, தயவு செய்து நேரடியாகப் பார்வையிட்டு, அதிகாரிகளை வரவழைத்து, எங்களிடத்திலே நேராகக் கேளுங்கள். நாங்கள் சொல்வதற்குத் தயாராக இருக்கிறோம். இந்த ஆய்வுப் பணியின் காலத்தை நீட்டித்துக்கொண்டே இருக்கின்றார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: : இப்பொழுது அமைச்சருக்கு விடை அளிக்கிறீர்களா இல்லை, நீங்கள் வினா எதுவும் கேட்கிறீர்களா ?

திரு. வி. கே. சின்னசாமி: இது எல்லோருடைய நன்மையையும் கருதித்தான் கேட்கின்றோம். காரணம், இந்த ஆய்வுப் பணிகளை நீட்டிக் கொண்டே செல்கின்றார்கள்...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா ரொம்ப நீண்டு கொண்டே போகிறதே என்றுதான் பார்க்கிறேன், வேறொன்றுமில்லை.

திரு. வி. கே. சின்னசாமி : ஆகவே, இதைக் கருத்திற்கொண்டு குறிப்பிட்ட காலத்திற்குள்,——இரண்டு மாதங்கள் என்று அமைச்சர் வைத்தால் நிச்சயமாக வரும். எனக்குத் தெரியும், ஆகவே, இப்பொழுது இரண்டு மாத காலத்திற்குள்ளாக அந்த ஆய்வுப் பணி முடிவுற்று இங்கே கோப்புகள் வாரியத்திற்கு அல்லது அரசுக்கு வரும் என்று உத்தரவாதத்தை அமைச்சர் கேட்டால் நிச்சயமாக வரும்.—அதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவரவர்களே, முதலிலேயே இதற்கான பதிலைச் சொல்லிவிட்டேன்.

எரிசாராய ஆலையின் கழிவுநீர்

165—(*வினா எண். 993) திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி, செந்தண்ணீர்புரத்தில் இருக்கும் திருச்சி எரிசாராய ஆலையிலிருந்து வரும் கழிவு நீர் சுத்தப்படுத்தப்படாமல் உய்யக்கொண்டான் வாய்க்காலில் விடப்பட்டு வருவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே,

(அ) இத்தொழிற்சாலையின் கழிவு நீர் சுத்திகரிக்கப்பட்ட பின்னரே உய்யக்கொண்டான் வாய்க்காலில் விடப்படுகின்றது.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அமைச்சரவர்கள் சொல்வது எனக்குப் புரியவில்லை. ஏனென்று சொன்னால், இன்றைக்கும் கழிவு நீர் விடப்பட்டு, உய்யக்கொண்டான் வாய்க்கால், இன்றைக்கு நேற்று அல்ல, 14 வருடங்களாகப் பாசனத்திற்கோ, குடிதண்ணீருக்கோ, குளிப்பதற்கோ பயன்படாமல் இருக்கிறது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS